# 27 செப்டம்பர் 2023 - தினசரி நடப்பு நிகழ்வுகள்

| | |
|---|---|
| **தாதாசாஹேப் பால்கே வாழ்நாள் சாதனையாளர் விருது**  | **செய்தி**: பழம்பெரும் நடிகை வஹீதா ரஹ்மானுக்கு பால்கே விருது. <br>• இந்திய சினிமாவிற்கு பழம்பெரும் பாலிவுட் நடிகை வஹீதா ரஹ்மான் ஆற்றிய சிறப்பான பங்களிப்பை கவுரவிக்கும் வகையில் 2021 ஆம் ஆண்டிற்கான தாதாசாஹேப் பால்கே வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்கப்படுகிறது. . <br>**முக்கிய குறிப்புகள் :** <br>• தாதாசாகேப் பால்கே விருது இந்திய சினிமாவின் மிக உயரிய விருது ஆகும். . <br>• இது ஆண்டுதோறும் **தேசிய திரைப்பட விருது** வழங்கும் விழாவில் திரைப்பட விழாக்களின் இயக்குநரகத்தால் வழங்கப்படுகிறது. <br>• இந்திய சினிமாவின் "முன்னேற்றத்தில் மற்றும் வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு" செய்தவருக்கு இந்த விருது மூலம் கௌரவிக்கப்படுகிறார். <br>• இந்த விருது **ஸ்வர்ண கமல் (தங்க தாமரை) பதக்கமும்**, ஒரு **சால்வையும்**, **1,000,000 ரூபாய்** ரொக்கப் பரிசையும் கொண்டுள்ளது. <br>**உங்களுக்கு தெரியுமா ?** <br>• இந்த விருது 1969 ஆம் ஆண்டில் தாதாசாகேப் பால்கேவின் பெயரால் |

| | |
|---|---|
| | அமைக்கப்பட்டது.<br>• தாதாசாகேப் **பால்கே இந்திய சினிமாவின் தந்தை** என்று கருதப்படுகிறார்.<br>• இந்த விருதை முதலில் பெற்றவர் **தேவிகா ராணி** ஆவார் . |
| **வரி செலுத்துவதற்கான புதிய இணையத்தளம்** | **செய்தி**:<br>கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள நுகர்வோர் ஆன்லைனில் வரி செலுத்த உதவும் வகையில், தமிழக முதலமைச்சர் இணையதளத்தை தொடங்கி உள்ளார்.<br>**முக்கிய குறிப்புகள்** :<br>• வரி வசூல் செயல்முறையை டிஜிட்டல் மயமாக்குவதற்கும், வரி செலுத்துவோரின் வசதிக்காக இந்த இணையதளம் அரசாங்கத்தின் ஒரு முன்முயற்சி ஆகும். .<br>• இது கிராமப் பஞ்சாயத்துகளில் உள்ள நுகர்வோருக்கு வீட்டு வரி, தண்ணீர் கட்டணம், தொழில் சார்ந்த வரி மற்றும் பிற கட்டணங்களை ஆன்லைனில் செலுத்துவதை எளிதாக்கும். |
| **குழந்தைகளுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை (TNSPC) 2021** | **செய்தி**:<br>தமிழக குழந்தைகள் கொள்கைக்கான செயல்திட்டம் இந்த மாதம் வெளியிடப்படும்.<br>• 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் குழந்தைகளுக்கான தமிழக அரசின் கொள்கை வெளியானது . இந்த கொள்கை வெளியான இரண்டு ஆண்டுகளுக்குப் பிறகு வரும் செப்டம்பர் மாத இறுதிக்குள் இந்தக் கொள்கையை அமல்படுத்துவதற்கான செயல் திட்டத்தை சமூகப் பாதுகாப்பு இயக்குநரகம் (Directorate of |

To get free Live Classes, Materials Scan this QR Code & Download our Adda247 App

| | |
|---|---|
| | Social Defence(DSD) வெளியிட உள்ளது.<br><br>**முக்கிய குறிப்புகள்** :<br><br>• குழந்தைகளுக்கான தமிழ்நாடு மாநில கொள்கை (TNSPC) 2021 என்பது மாநிலத்தில் உள்ள அனைத்து குழந்தைகளின் முழுமையான வளர்ச்சியை உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்ட ஒரு விரிவான கொள்கையாகும்.<br><br>• இந்தியாவில் கொண்டு வந்த முதல் கொள்கை இதுவாகும். இது **குழந்தை உரிமைகள் மற்றும் சமத்துவத்தின்** கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டது.<br><br>• நீடித்த வளர்ச்சிக்கான இலக்குகளுடன் இணைந்து செயல்படும் விரிவான மற்றும் முன்னோக்குக் கொள்கையாக குழந்தைகளுக்கான தமிழ்நாடு மாநிலக் கொள்கை 2021 உள்ளது. |
| **தமிழ்நாடு மாநில சுற்றுலாக் கொள்கை 2023**<br><br><br> | **செய்தி**:<br><br>தமிழ்நாடு மாநில சுற்றுலாக் கொள்கை 2023ஐ வெளியிட்டது தமிழக அரசு..ஐந்து ஆண்டுகளில் ரூ.20,000 கோடி முதலீட்டை இலக்காக நிர்ணயித்துள்ளது.<br><br>• மாநிலத்தில் சுற்றுலாத் தலங்களை நிலையான மற்றும் முழுமையான முறையில் திறம்பட மேம்படுத்துவதற்கும், நிர்வகிப்பதற்கும், ஊக்குவிப்பதற்கும் "மாநில சுற்றுலாக் கொள்கை 2023"யை தமிழக அரசு வெளியிட்டது.<br><br>• ஐந்து ஆண்டுகளில் 20,000 கோடி ரூபாய் முதலீட்டை ஈர்க்கும் இலக்கை இந்தக் கொள்கை நிர்ணயித்துள்ளது. |

| | |
|---|---|
| | **முக்கிய குறிப்புகள்** :<br><br>• இந்தத் துறையில் 25 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கி, மாநிலத்தின் **மொத்த உள்நாட்டு உற்பத்தியின்** பங்களிப்பை 12 சதவீதமாக உயர்த்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.<br><br>இந்தக் கொள்கை ஐந்து முக்கிய பகுதிகளில் கவனம் செலுத்துகிறது:<br><br>1. உள்கட்டமைப்பு வளர்ச்சி<br>2. தயாரிப்பு அபிவிருத்தி<br>3. சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவித்தல்<br>4. நிலைத்தன்மை<br>5. சமூக பங்கேற்பு |
| **தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சங்கம்** | **செய்தி**:<br><br>தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சங்கம் மாணவர்களின் செயல்திட்டத்திற்கு ஊக்கமளிக்கிறது.<br><br>• தமிழக உயர்கல்வித் துறையின் கீழ் உள்ள தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சங்கம் இளம் விஞ்ஞானிகள் உதவித்தொகைத் திட்டத்தைத் தொடர மாணவர்களின் செயல்திட்டத்தை இந்த ஆண்டு நீட்டித்துள்ளது.<br><br>**முக்கிய குறிப்புகள்** :<br>• மாநிலத்தில் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் வளர்ச்சிக்கு தமிழ்நாடு மாநில அறிவியல் மற்றும் தொழில்நுட்ப சங்கம் உதவுகிறது. |

| | |
|---|---|
| | • ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு , களம் சார்ந்த செயல்திட்டங்கள் தொடர்பான மாணவர்களுக்கு பல்வேறு நலத்திட்டங்களை இது செயல்படுத்துகிறது.<br>• 2022-2023 ஆம் ஆண்டில் 2,376 மாணவர்களின் நலனுக்காக மொத்தம் 1,018 மாணவர் திட்டங்களுக்கு ஆதரவு அளிக்கப்பட்டுள்ளது. |
| **இளம் விஞ்ஞானிகள் உதவித்தொகை திட்டம்** | **முக்கிய குறிப்புகள் :**<br>• இளம் விஞ்ஞானிகள் உதவித்தொகை திட்டம் என்பது தமிழக அரசின் ஒரு முன்முயற்சியாகும். இளம் விஞ்ஞானிகளின் திறன்களை வளர்ப்பதற்கும், ஆராய்ச்சியில் தங்கள் அறிவைப் புதுப்பிப்பதற்கும், வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.<br>• 40 வயதிற்கு உட்பட்ட மாநில விஞ்ஞானிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களுக்காக இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது .<br>• இந்தத் திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட விஞ்ஞானிகளுக்கு அவர்கள் வேலை செய்யும் நிறுவனங்கள் கொடுக்கும் சம்பளமும் சேர்த்து 2 முதல் 6 மாதங்கள் வரை மாதத்திற்கு 10,000 ரூபாய் உதவித்தொகையும் வழங்கப்படுகிறது. |

| தமிழ்நாடு வேளாண்மை இயந்திரமயமாக்கல் திட்டம் | செய்தி:<br><br>வேளாண் உற்பத்தியை அதிகரிக்க மானியத் திட்டத்தை மாநில அரசு அறிமுகப்படுத்துகிறது.<br><br>• விவசாய செயல்பாடுகள் சரியான நேரத்தில் செயல்படுவதன் மூலம் விவசாயத்தில் உற்பத்தி, உற்பத்தித்திறன் மற்றும் இலாபத்தை அதிகரிக்க தமிழக அரசு ,"**தமிழக வேளாண் இயந்திரமயமாக்கல்** திட்டத்தின்' கீழ் மானியத் திட்டத்தை அறிமுகப்படுத்துகிறது.<br><br>**முக்கிய குறிப்புகள்** :<br><br>• விவசாயிகளின் விவசாய இயந்திரத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக E-வாடகை செயலி அறிமுகப்படுத்தப்பட்டது.<br><br>• தமிழக வேளாண் இயந்திரமயமாக்கல் திட்டத்தின் கீழ் விவசாய இயந்திரங்களின் விலையில் 50 சதவீதம் வரை மானியம் வழங்கப்படுகிறது.<br><br>• தமிழ்நாடு E-வாடகை என்பது செப்டம்பர் 2021 இல் தமிழக அரசால் தொடங்கப்பட்ட ஒரு மொபைல் பயன்பாடாகும்.<br><br>• விவசாய இயந்திரங்கள் மற்றும் கருவிகளை முன்பதிவு செய்து வாடகைக்கு எடுப்பதற்கு விவசாயிகளுக்கு உதவும் ஒரே தளமாகும். |
|---|---|

***பதிப்புரிமை © Adda247***

*அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை. இந்த ஆவணத்தின் எந்தப் பகுதியையும் Adda247 இன் முன் அனுமதியின்றி மீண்டும் உருவாக்கவோ, மீட்டெடுக்கும் அமைப்பில் சேமிக்கவோ அல்லது எந்த வடிவத்திலும் அல்லது எந்த வகையிலும் மின்னணு, இயந்திர, புகைப்பட நகல், பதிவு செய்தல் அல்லது வேறுவிதமாக அனுப்பக்கூடாது.*